எனது இல 06/02/17/1
வதிவிட திட்டமுகாமையாளர்,
கல்லோயா வலது கரை,
அக்கரைப்பற்று.
2019.02.27

சகல திட்ட முகாமைத்துவ குழு உறுப்பினர்களுக்கும்,

**2019ம் ஆண்டிற்கான சிறுபோக முன்னோடி ஆரம்பக் கூட்டம்**

1994ம் ஆண்டின் 13ம் இலக்க நீர்ப்பாசன (திருத்த) கட்டளைச் சட்டத்தின் கீழ் கல்லோயா வலது கரை அக்கரைப்பற்று திட்ட முகாமைத்துவத்திற்கு உட்பட்ட பிரதேசங்களுக்கான 2019ம் ஆண்டு சிறுபோக பயிர்ச்செய்கை முன்னோடி ஆரம்பக் கூட்டம் 26.02.2019ம் திகதி கல்லோயா வலது கரை, வதிவிட திட்ட முகாமையாளர் காரியாலயத்தில் மு.ப.10.30 மணியளவில் வதிவிட திட்ட முகாமையாளர் ஜனாப் எம்.எம்.நழீம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

வதிவிட திட்டமுகாமையாளரின் வரவேற்புரையின்போது, கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் அனைத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், திட்டமட்டத்திலான விவசாய அமைப்பின் தலைவர், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மேலும் அவர் கூறுகையில் 2019ம் ஆண்டு சிறுபோக பயிர்ச்செய்கை முன்னோடி ஆரம்பக் கூட்டத்தில் கூடியிருக்கின்றோம். பயிர்ச்செய்கை தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும் கூட்டமாக இக்கூட்டம் அமைகின்றது. தற்போது சேனநாயக்க சமுத்திரத்தில் 78.5 அடி நீர்மட்டம் காணப்படுகின்றது.அதாவது 300000 ஏக்கரடி நீர் காணப்படுகின்றது. சேனநாயக்க சமுத்திரத்தில் இருக்கும் நீரைக்கொண்டு சுமார் 70000 ஏக்கர் மட்டுமே விவசாயம் செய்கைபண்ண முடியும், இருந்தும் 120000 ஏக்கர் விவசாயம் செய்கைபண்ண வேண்டியிருக்கின்றது. எனவே அவ்வாறு எல்லா நெற்காணிகளும் பயிர்செய்யவேண்டுமாயின் விவசாயிகளாகிய நீங்கள் மிகவும் அவதானத்துடன் தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் ஒரு போகத்தில் ஒரு ஏக்கர் நெற்பயிர்ச்செய்கைக்கு 3.5 ஏக்கரடி நீர் தேவைப்படுகிறது. இந்தப்போகத்தில் விவசாயிகள் அனைவரும் அதிக சிரத்தையுடன் செயற்படல் அவசியமாகும். அத்துடன் உரமானியம் பெற்ற நெற்காணிகளுக்கு வெள்ளம்,வரட்சி யானையினால் ஏற்படுகின்ற பாதிப்பு ஆகியவற்றுக்கான காப்புறுதிப்பணமாக ஏக்கருக்கு ரூபா 40000.00 வழங்கப்படுவதோடு மேலும் ஏக்கருக்கு ரூபா 400.00 செலுத்தி பூரண காப்புறுதி செய்ய முடியும் எனக்கூறினார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் பெய்கின்ற மழைநீரை வீணாகவிடாமல் அதனை பயன்படுத்தி உச்சப்பயனை விவசாயிகள் அனைவரும் பெறல்வேண்டும் எனவும் கூறினார். அத்துடன் விதைப்பு நடவடிக்கைகளை 15.03.2019 தொடக்கம் 05.04.2019ம் திகதிக்குள் விதைத்து முடித்தல் சிறந்ததாக அமையும் என்பதோடு, இக்காலம் தற்போதைய காலநிலையையும், விவசாயிகளின் நலன்கருதியுமே குறிக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.அத்துடன் 01.04.2019ம்திகதி நீர் திறந்து விநியோகிக்க முடியும், என்பதுடன் உத்தியோகத்தர்களுடனான விவசாயிகளினது முழு ஒத்துழைப்பும் மிக அவசியம் என்றும் கூறினார். அத்துடன் விவசாயிகள் அனைவரும் மனிதபிமான முறையிலும்,விட்டுக்கொடுப்பு, பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற குணஅடிப்படையிலும் நீரை பயன்படுத்துதல் வேண்டும். இத்தீர்மானங்களை விவசாய அமைப்பின் பொதுக்கூட்டங்களில் விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் கூறினார். அதே வேளை விவசாயிகளினால் தங்களது வாய்க்கால்கள் அனைத்தும் துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்றும் அவ்வாறு விவசாயிகளினால் துப்பரவு செய்யப்படாத வாய்க்கால்கள் விவசாய அமைப்புக்களினால் துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்றும் அதுவே சிறந்த முறையில் நீரை முகாமைத்துவம் செய்வதற்கு உந்துதலாக

அமையுமென்றும் கூறினார். அத்துடன் உரிய நேரத்துக்கு பணத்தைச் செலுத்தி உரிய வேளையில் உரமானியத்தை பெற்றுக்கொள்வதனால் உரத்தை காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் 05.04.2019ம் திகதியிலிருந்து சுழற்சிமுறையில் நீர் விநியோகிக்கப்படும். விவசாயிகள் தங்களுக்கு தேவையானளவில் நீரினை சேமித்து சிக்கனமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அந்நேர நிலமையை கருத்திற்கொண்டு நீரை பயன்படுத்துதல் அவசியமாகும் என ஆலோசனை வழங்கினார்.

## நிறுவக அபிவிருத்தி

நிறுவக அபிவிருத்தி தொடர்பாக வதிவிடத்திட்ட முகாமையாளர் காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. தற்பரன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், முன்னோடி ஆரம்பக்கூட்டத்தை தொடர்ந்து விவசாய அமைப்புக்கள் தமது அமைப்பின் பொதுக்கூட்டத்தினை நடாத்தி இக் கூட்டத்தீர்மானங்களை விவசாயிகளுக்கு வழங்குதல் வேண்டும். மேலும் காலம்கடந்த நிருவாக சபையினை உடைய விவசாய அமைப்புக்களாக இலுக்குச்சேனை,தில்லையாறு,பறக்கத்நகர்,கொச்சிக்காச்சேனை வடக்கு ஆகிய விவசாய அமைப்புக்கள் விரைவாக தமது புதிய நிருவாகத் தெரிவினை மேற்கொள்ளவேண்டும் எனவும் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.அத்துடன் விவசாய அமைப்புக்கள் கணக்குப்புத்தகம். ரசீது,வவுச்சர், ஆகிய ஆவணங்களை இன்னும் முறையாக பேணி தனது கணக்கு நடவடிக்கையை மேலும் திறம்பட மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

வதிவிட திட்டமுகாமையாளர் அவர்கள் நிறுவக அபிவிருத்தி தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் காலம்கடந்த நிருவாக சபையினை உடைய விவசாய அமைப்புக்கள் இருவாரங்களுக்குள் பொதுக்கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.உரிய வேளையில் கூட்டம் நடாத்தாத விவசாய அமைப்புக்களின் உரமானியம் கமநலசேவை மத்திய நிலையம் ஊடாக வழங்கவேண்டிய நிலமை ஏற்படும் எனவும் கூறினார். மாவட்டம், மற்றும்தேசியமட்டத்தில் போட்டியில் பங்குகொள்வதற்காக அக்கரைப்பற்று நீர்ப்பாசனத்திட்டத்திலிருந்து 3 விவசாய அமைப்புக்களை தெரிவு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

## நீர்ப்பாசன திணைக்களம்

நீர்ப்பாசன திணைக்களம் சார்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் திரு.ரி.மயூரன் அவர்கள் ஆலோசனை வழங்குகையில், இம் முறை போதுமான அளவில் நீர் கிடைத்துள்ளது. சேனநாயக்க சமுத்திரத்தில் இருக்கும் நீரைக்கொண்டு சுமார் 70000 ஏக்கர் மட்டுமே விவசாயம் செய்கைபண்ண முடியும், இருந்தும் 120000 ஏக்கர் விவசாயம் செய்கைபண்ணப்படுகின்றது.எனவே மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பதனை விவசாயிகளாகிய நீங்கள் கருத்திற்கொண்டு இப்போகத்தில் திறன்வாய்ந்த விசாயத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் அதே வேளை விவசாயிகளினால் தங்களது வாய்க்கால்கள் அனைத்தும் துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்றும் அத்துடன் நீர்விநியோக ஆரம்பத் திகதிக்கு முன்னரே சகல வாய்க்கால்களும் துப்பரவு செய்யப்படல் வேண்டும் என்றும் இச்செயற்பாடு சிறந்த நீர் முகாமைத்துவத்தினை மேற்கொள்ளவும் அனைவருக்கும் உரிய காலத்திற்குள் நீரை பெறக்கூடியதுமாக அமையும் என்று கூறியதோடும். இதனை விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் விவசாயிகளுக்கு அறியப்படுத்துதல் வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் இம்முறை நீரானது 14 நாட்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் திறந்து சுழற்சிமுறையில் விநியோகிக்கப்படும். சுழற்சிமுறையில் நீர் பாய்ச்சப்படும் போது மிகவும் தூரவுள்ள வாய்க்கால்களுக்கு நீர் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால், அவ்விவசாயிகள் நிலமையை கருத்திற்கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுதல் சிறப்பானதாக அமையும் எனவும் கூறினார்.

## திட்டமட்டத்திலான விவசாய சங்கத்தின் தலைவர் கருத்து

விவசாய அமைப்புக்களின் சார்பாக திட்டமட்டத்திலான விவசாய சங்கத்தின் தலைவர் ஏ.சீ.சிறாஜுதீன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்தபோகம் விவசாயிகள் அனைவரும் நீர்ப்பாசன திணைக்களத்துடன் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்தபோகம் நீர் மிகவும் அரிதாகவுள்ளதால் விவசாயிகள் நீரினை சேமித்து சிக்கனமாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாககும் எனவும் கூறினார். இதனை விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் விவசாயிகளுக்கு பொதுக்கூட்டங்களில் அறியப்படுத்துதல் வேண்டும் என்றும் கூறினார். உரிய நேரத்துக்கு பணத்தைச் செலுத்தி உரிய வேளையில் உரமானியத்தை பெற்றுக்கொள்வதனால் உரத்தை காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

அதனைத் தொடர்ந்து முன்னோடி ஆரம்பக் கூட்டத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

**முன்னோடி ஆரம்பக் கூட்டத் தீர்மானங்கள் - 2019 சிறுபோகம்**

| | |
|---|---|
| சிபாரிசு செய்யப்பட்ட நெல்லினம் | 3, 3½ மாதம் |
| விவசாயிகளினால் வாய்க்கால் துப்பரவு செய்வதற்கான இறுதித் திகதி | 10.03.2019 |
| விவசாயிகளால் உரிய காலத்தில் துப்பரவு செய்யப்படாத வாய்க்கால்களை விவசாய சங்கங்கள் துப்பரவு செய்ய வேண்டிய இறுதித்திகதி. | 15.03.2019 |
| விதைப்பு காலம் | 15.03.2019 - 05.04.2019 |
| பயிர்ச் செய்கை காப்புறுதி இறுதித் திகதி | 05.04.2019 |
| கால்நடை அகற்றுதல் இறுதித் திகதி | 15.03.2019 |
| நீர் விநியோக ஆரம்பத்திகதி | 01.04.2019 |
| நீர்விநியோக இறுதித் திகதி | 05.07.2019 |
| இம்முறை பயிர்ச் செய்கைக்காக சிபாரிசு செய்யப்படும் பிரதேசம் (நெல்) | 24010 ஏக்கர் |
| சுமந்திரம் | ஏக்கருக்கு அரை புசல் (அறுவடைக்கு பின்னர்) |
| தண்டப்பணம் (வாய்க்கால் துப்பரவு செய்யாமைக்கான) | 100ரூபா(ஒரு பாகத்திற்கு) |
| பங்கீட்டு வாய்க்கால் சங்கத்தின் அபிவிருத்தி நிதி(ஏக்கருக்கு) | 150.00ரூபா (ஏக்கருக்கு) |
| உழவு இயந்திரங்களை பயிர்ச் செய்கைப் பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கான இறுதித்திகதி | 05.04.2019 |

முக்கிய குறிப்பு

- விதைப்பு நடவடிக்கைகளுக்காக மட்டும் 01.04.2019ம்திகதி நீர் வழங்கப்படும் (ஆரம்ப நீர் விநியோகம்)
- நெற்காணிகளில் தற்போதுள்ள ஈரப்பதனைக்கொண்டு நிலத்தைப்பண்படுத்துதல் வேண்டும்.
- விவசாயிகள் உரிய காலத்துக்குள் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- விவசாய அமைப்புக்களினாலும் விவசாயிகளினாலும் பூரணமாக வாய்க்கால்கள் துப்பரவு செய்ய வேண்டும்.
- ஒரு ஏக்கருக்கு ரூபா 400.00 பணத்தை செலுத்துவதன் மூலம் பூரண விவசாயக்காப்புறுதியை மேற்கொண்டு ஏதாவது நஷ்டமேற்படின் இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளை விவசாய அமைப்புக்கள் அறிவுறுத்துதல் வேண்டும்.
- நீரைக்கொண்டு செல்வதற்கு சிரமமான பிரதேசம் மற்றும் நீரைப்பாய்ச்சுவதற்கு சிரமமான நெற்காணிகளை விவசாய அமைப்புக்கள் இனங்கண்டு நெற்பயிர்ச்செய்கையிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். (பனங்காடு, களியோடை, புட்டம்பை, சம்புநகர், பாமங்காய், AK 09 ஆகிய விவசாய அமைப்புக்களில்)
- நீரானது இரு வாரங்களுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் விநியோகிக்க முடியும்.

பிரேரித்தவர்: எஸ்.எச். அப்துல் றஹ்மான்(தலைவர் அல்ஹாமில் வி.அ)
ஆமோதித்தவர்: யூ.எல் அபுல்ஹசன்(செயலாளர் RB31 வி.அ)

**நன்றியுரை**

வதிவிட திட்டமுகாமையாளர் அவர்களினால் நன்றியுரை வழங்கப்பட்டு கூட்டம் இனிதே முடிவு பெற்றது.

எம்.எம்.நழீம்
வதிவிட திட்ட முகாமையாளர்,

M.M. Naleem
Resident Project Manager
Galoya Right Bank
Irrigation Management Division
Ministry of Irrigation & Water
Resources Management

M. M. Naleem
Resident Project Manager
Irrigation Management Division
Ministry of Irrigation & Water Resource Management
Gal-oya Right Bank
Akkaraipattu.